# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2348/37 - 2023 සැප්තැම්බර් මස 07 වැනි බ්‍රහස්පතින්දා - 2023.09.07

*2348/37 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 07 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

25அ என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 27(1)(ஆ) என்னும் பிரிவின் கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 27(1)(ஆ) என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, கல்வி அமைச்சர் கலாநிதி ஏ. டி. சுசில் பிரேமஜயந்த ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதும், பட்டத்தை அளிக்கின்ற நிறுவகமொன்றாக ஏற்றங்கீகரிக்கப்பட்ட PV 17745 ஆம் பதிவிலக்கத்தைக் கொண்டதும் மிலேனியம் டிரைவ், IT பார்க், மாலபே 10115 இல் அமைந்துள்ளதுமான சினெக் கெம்பஸ் (பிறைவேட் லிமிட்டெட்) தொடர்பில், மேற்கூறப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழ் அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு, சொல்லப்பட்ட சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்டதும் 2023 ஆம் ஆண்டு யூலை மாதம் 31 ஆந் திகதிய 2343/03 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான II ஆம் அட்டவணையை அதற்கான நிரல் I இல் காணப்படும் "சந்தைப்படுத்தலில் வணிக முகாமைத்துவத்தில் கௌரவ இளமானி" என்னும் பதிவையும் நிரல் II இல் உள்ள அதன் நேரொத்த பதிவையும் உடனடுத்து, அதற்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைவாக இதற்கான அட்டவணை II இன் முறையே நிரல் I இன் கீழும் நிரல் II இன் கீழும் குறித்துரைக்கப்பட்ட பதிவுகளைச் சேர்ப்பதன் மூலம் இக்கட்டளையினால் திருத்துகின்றேன் :-

## அட்டவணை I

நிபந்தனைகள்

1. சினெக் கெம்பஸ் (பிறைவேட் லிமிட்டெட்), குறைந்தபட்சம் 60 திறமை மதிப்பீடுகளுடன் மருந்தாக்கல் விஞ்ஞான முதுமானி (இலங்கை தகைமை கட்டமைப்பு மட்டம் 10) தொடர்பில் இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்ட நிகழ்ச்சித் திட்டத்துக்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும்போது:

    (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அல்லது உயர் கல்வி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட இயைபான பாடப்பரப்பில் 30 திறமை மதிப்பீடுகளை உள்ளடக்கிய இளமானி பட்டமொன்று ; அல்லது

    (ஆ) இயைபான கற்கைப்பரப்பில் SLQF மட்டம் 6 அல்லது அதற்கு மேலான தகைமையொன்று ; அல்லது

    (இ) SLQF மட்டம் 6 அல்லது அதற்கு மேலான உயர் தொழிற்தகைமையொன்று ; அல்லது

    (ஈ) உயர்கல்வி நிறுவகத்தின் கல்வியியல் அதிகாரியினால் தீர்மானிக்கப்பட்டவாறு, 0-4 எனும் அளவீட்டின்மேல் 3.0 எனும் குறைந்தபட்ச தரப் புள்ளி சராசரியொன்றுடனான NVQ மட்டம் 7 இனைப் பூர்த்திசெய்துள்ளமையானது, அத்துறையில் விசேடத்துவ அனுமதிக்காக கருத்திற்கொள்ளப்படலாம்.

2. சினெக் கெம்பஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஆனது, குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் நடாத்தப்படும் ஐந்து (5) ஆண்டு மீள் மீளாய்வுக்கு அமைய இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்டத்தை வழங்குவதற்கு ஏற்றங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

## அட்டவணை II

| நிரல் I<br>பட்டம் | நிரல் II<br>பட்டத்துக்கான சுருக்கீடு |
|---|---|
| மருந்தாக்கல் விஞ்ஞான முதுமானி | எம்எஸ்சீ (மருந்தாக்கல் விஞ்ஞானம்) |

கலாநிதி **ஏ. டி. சுசில் பிரேமஜயந்த,**
கல்வி அமைச்சர்.

கொழும்பு,
2023, செத்தெம்பர் 05.

EOG 09-0060/ 1

---

## 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்

25அ என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 27(1)(ஆ) என்னும் பிரிவின் கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவுடன் சேர்த்துவாசிக்கப்படும் 27(1)(ஆ) என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு, உயர் கல்வி அமைச்சர் கலாநிதி ஏ. டி. சுசில் பிரேமஜயந்த ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதும், பட்டம் வழங்கும் நிறுவனமொன்றாக ஏற்றங்கீகரிக்கப்பட்ட PV 101137 எனும் பதிவிலக்கத்தைக் கொண்டுள்ளதுமான எஸ். எல். ரி. கம்பஸ் (பிறைவேட்) லிமிடெட் தொடர்பில் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழான அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு, சொல்லப்பட்ட சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்டதும், 2022 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 07 ஆந் திகதிய 2296/ 08 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான II ஆம் அட்டவணையை, அதற்கான நிரல் I இல் காணப்படும் “பிரயோக தகவல் தொழிநுட்ப இளமாணி” என்னும் பதிவையும், நிரல் II இலுள்ள அதன் நேரொத்த பதிவையும் உடனடுத்து, அதற்கான I ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைய, இதற்கான II ஆம் அட்டவணையின் முறையே நிரல் I இன் கீழும் நிரல் II இன்கீழும் குறித்துரைக்கப்பட்ட பதிவுகளைச் சேர்ப்பதன் மூலம் இக்கட்டளையினால் திருத்துகின்றேன்.

## அட்டவணை I

நிபந்தனைகள்

எஸ். எல். ரி. கம்பஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஆனது-

(1) குறைந்தபட்சம் 120 திறமைச் சித்திகளுடன் (SLQF) (மட்டம் 6) ஊடகவியல் மற்றும் எண்ணிம ஊடகக் கற்கைகளில் சிறப்பு விஞ்ஞான இளமாணி தொடர்பில் இதற்கான II ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட பட்ட நிகழ்ச்சித் திட்டத்திற்காக மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும்போது -

(அ) இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க. பொ. த. (உயர்தரப் பரீட்சையில்) ஏதேனும் பாடத்துறையில் ஒரே தடவையில் மூன்று (3) சாதாரண (S) சித்திகள் அல்லது அதற்குச் சமமான தகைமையை குறைந்தபட்ச நுழைவுத்தகைமைக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்.

(2) குறைந்தபட்சம் 60 திறமைச் சித்திகளுடன் (SLQF) (மட்டம் 10) வியாபார நிர்வாக முதுமாணி தொடர்பில் இதற்கான II ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட பட்ட நிகழ்ச்சித் திட்டத்திற்காக மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும்போது -

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அல்லது உயர் கல்வி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சினால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட (வர்த்தகம், பொருளியல், பொது நிருவாகம் அல்லது பொறியியல் முகாமைத்துவம் உட்பட) ஏதேனும் வியாபார அல்லது முகாமைத்துவ தொடர்புபட்ட கற்கைநெறியல் சிறப்பு முதலாம் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பு (மேற்பிரிவு) ஒன்றைக் கொண்டனவான குறைந்தபட்ச நுழைவுத்தகைமைக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்.

(ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அல்லது உயர் கல்வி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சினால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட (வர்த்தகம், பொருளியல், பொது நிருவாகம் அல்லது பொறியியல் முகாமைத்துவம் உட்பட) ஏதேனும் வியாபார அல்லது முகாமைத்துவம் தொடர்புபட்ட கற்கைநெறியில் இளமாணிப் பட்டம் ஒன்றையும் மற்றும் குறைந்தபட்சம் ஒரு வருட (01) பட்டப்பின் தகைமை வேலை அனுபவத்தையும் கொண்ட குறைந்தபட்ச நுழைவுத்தகைமைக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்.

(இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அல்லது உயர் கல்வி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சினால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட (வர்த்தகம், பொருளியல், பொது நிருவாகம் அல்லது பொறியியல் முகாமைத்துவம் உட்பட) ஏதேனும் வியாபார அல்லது முகாமைத்துவம் தொடர்புபட்ட கற்கைநெறியில் முதலாம் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பு (மேற்பிரிவு) இல் பொதுப்பட்டம் ஒன்றையும் மற்றும் குறைந்தபட்சம் ஒரு வருட (01) பட்டப்பின் தகைமை வேலை அனுபவத்தையும் கொண்ட குறைந்தபட்ச நுழைவுத்தகைமைக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்.

(ஈ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அல்லது உயர் கல்வி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சினால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட (வர்த்தகம், பொருளியல், பொது நிருவாகம் அல்லது பொறியியல் முகாமைத்துவம் உட்பட) ஏதேனும் கற்கைநெறியில் பட்டம் ஒன்றையும் அத்துடன் ஏதேனும் வியாபார அல்லது முகாமைத்துவம் தொடர்புபட்ட கற்கைநெறியில் ஆகக்குறைந்தது பட்டப்பின் திப்புளோமாவையும் கொண்ட ஆகக்குறைந்தபட்சம் தகைமைக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்.

(உ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அல்லது உயர் கல்வி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சினால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் கற்கைநெறியில் பட்டம் ஒன்றையும் மற்றும் குறைந்தபட்சம் இரண்டு வருட (02) முகாமைத்துவ மட்ட பட்டப்பின் தகைமை வேலை அனுபவத்தையும் கொண்ட குறைந்தபட்ச நுழைவுத்தகைமைக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்.

(ஊ) குறைந்தபட்சம் இரண்டு வருட (02) முகாமைத்துவ மட்ட பட்டப்பின் தகைமை வேலை அனுபவத்துடன் பின்வரும் உயர் தொழில் தகைமைகளில் ஒன்றும் ; அல்லது

I. பட்டயம் பெற்ற கணக்காளர்கள் நிறுவகம் (ஏசிஏ) - இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ;
II. பட்டயம் பெற்ற முகாமைத்துவக் கணக்காளர்கள் நிறுவகம் (சிஐஎம்ஏ) - இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ;

III. பட்டயம் பெற்ற மற்றும் சான்றுப்படுத்தப்பட்ட கணக்காளர்கள் கழகம் (ஏசிசிஏ) - இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ;
IV. ஐக்கிய இராச்சியம் பட்டயம் பெற்ற சந்தைப்படுத்தல் நிறுவகம் (சிஐஎம்) பட்டப்பின் திப்புளோமா ;
V. ஐக்கிய இராச்சியம் பட்டயம் பெற்ற வங்கியாளர்கள் நிறுவகம் (ஏசிஐபி) இணை உறுப்பினர்கள் திப்புளோமா ;
VI. இலங்கை பட்டயம் பெற்ற வங்கியாளர்கள் நிறுவகம் (ஏஐபி) இணை உறுப்பினர்கள் திப்புளோமா ;
VII. இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவகம் (எஸ்எல்ஐஏரிஈ கணக்கியலில் உயர் தேசிய திப்புளோமா (எச்என்டிஏ) (நான்கு வருட கற்கைநெறி) ;
VIII. இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவகம் (எஸ்எல்ஐஏரிஈ) - முகாமைத்துவத்தில்/வர்த்தகத்தில் உயர் தேசிய திப்புளோமா (எச்என்டிஎம்/சி) (நான்கு வருட கற்கைநெறி) ;
IX. பட்டயம் பெற்ற செயலாளர்கள் மற்றும் நிருவாகிகள் நிறுவகம் - உறுப்பினர் ;
X. சட்டத்தரணி.

(ஏ) ஐந்து வருட முகாமை மட்டப்பதவி தகைமை அனுபவத்துடனான பின்வரும் உயர் தொழில் தகைமைகளில் ஒன்றும் :

I. இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவகத்தினால் (எஸ்எல்ஐஎம்) வழங்கப்பட்ட சந்தைப்படுத்தலில் திப்புளோமா ;
II. பட்டயம்பெற்ற ஆளணி முகாமைத்துவ நிறுவகத்திலிருந்து (சிஐபிஎம்) பெறப்பட்ட மனிதவள முகாமைத்துவத்திற்கான உயர் தொழில் தகைமை.

(3) எஸ். எல். ரி. கம்பஸ் (பிறைவேட்) லிமிட்டெட் (SLT) ஆனது குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் நடாத்தப்பட்ட ஐந்து (5) ஆண்டு மீள் மீளாய்வுக்கு அமைய இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்டங்களை வழங்குவதற்கு ஏற்றங்கீகரிக்கப்படுகின்றது.

**அட்டவணை II**

| *நிரல் I*<br>*பட்டம்* | *நிரல் II*<br>*பட்டங்களுக்கான சுருக்க குறியீடுகள்* |
|---|---|
| ஊடகவியல் மற்றும் எண்ணிம ஊடகக் கற்கைகளில் சிறப்பு விஞ்ஞான இளமாணி | பிஎஸ்சி சிறப்பு (ஊடகவியல் மற்றும் எண்ணிம ஊடகக் கற்கைநெறி) |
| வியாபார நிருவாக முதுமாணி | எம்பிஏ |

கலாநிதி **ஏ. டி. சுசில் பிரேமஜயந்த,**
கல்வி அமைச்சர்.

கொழும்பு,
2023, செத்தெம்பர் 05.

EOG 09-0060/2

---

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

25அ என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 27(1)(ஆ) என்னும் பிரிவின் கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவுடன் சேர்த்துவாசிக்கப்படும் 27(1)(ஆ) என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு, கல்வி அமைச்சர் கலாநிதி ஏ. டி. சுசில் பிரேமஜயந்த ஆகிய நான், மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழான அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு, 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதும், PV 62877 எனும் பதிவிலக்கத்தைக் கொண்டதும் பட்டமளிக்கும் நிறுவகமொன்றாக ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஹொரைசன் கொலிஜ் ஒப் பிஸ்னஸ் டெக்னொலொஜி (பிறைவேட்) லிமிட்டெட் தொடர்பில், சொல்லப்பட்ட சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்டதும் 2023, யூன் 12 ஆந் திகதிய 2340/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான II ஆம் அட்டவணையை, அதன் நிரல் I இலும் மற்றும் நிரல் II இலுள்ள அதன் நேரொத்த பதிவிலும் காணப்படுகின்ற “தகவல் தொழில்நுட்பத்தில் சிறப்பு கல்வி இளமாணி” என்னும் பதிவை உடனடுத்து, இதற்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைய இதற்கான அட்டவணை II இல் முறையே நிரல் I மற்றும் நிரல் II இன் கீழ் குறித்துரைக்கப்பட்ட பதிவுகளைச் சேர்ப்பதன் மூலம் இக்கட்டளையால் திருத்துகின்றேன் :-

## அட்டவணை I

நிபந்தனைகள்

1. ஹொரைசன் கொலிஜ் ஒப் பிஸ்னஸ் டெக்னொலொஜி (பிறைவேட்) லிமிட்டெட் ஆனது -

(அ) ஆகக்குறைந்தது 120 திறமைச் சித்திகளை (SLQF) மட்டம் 6) உடன் சிறப்பு உயிரியல் முறைமை தொழில்நுட்ப இளமானி தொடர்பில், இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்ட நிகழ்ச்சித் திட்டத்திற்காக மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும் போது,

(i) இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க. பொ. த. (உயர்தரப்) பரீட்சையில் ஒரே தடவையில், உயிரியல் முறைமை தொழில்நுட்ப பாடத்துறையில் மூன்று (3) 'சாதாரண சித்திகள்' (S) அல்லது அதற்குச் சமமான தகைமையினைக் கொண்ட ஆகக்குறைந்தபட்ச நுழைவுத் தகைமைகளுக்கு அமைந்தொழுகுதல் வேண்டும் :

(ஆ) ஆகக்குறைந்தது 60 திறமைச் சித்திகளை (SLQF) மட்டம் 10) உடன் கல்வி முதுமானி தொடர்பில், இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்ட நிகழ்ச்சித் திட்டத்திற்காக மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும் போது-

(i) உயர் கல்வி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சினால் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து சிறப்பு கல்வி இளமாணி பட்டம் ; அல்லது

(ii) கல்வித் துறையில் ஆகக்குறைந்தது இரண்டு வருட அனுபவத்துடன் உயர் கல்வி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சினால் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அல்லது ஏற்றங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து கல்வி இளமாணி பட்டம் ; அல்லது

(iii) கல்வித் துறையில் ஆகக்குறைந்தது இரண்டு வருட அனுபவத்துடன் உயர் கல்வி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சினால் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து கல்வியில் பட்டப்பின் படிப்பு திப்புளோமா ஒன்றுடனான இளமாணி பட்டம் ; அல்லது

(iv) கல்வித் துறையில் ஆகக்குறைந்தது ஐந்து வருட அனுபவத்துடன் உயர் கல்வி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சினால் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து இளமாணி பட்டம் ; அல்லது

(v) உயர் கல்வி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சினால் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து கல்வி முதுமாணிப் பட்டம் ; (SLQF மட்டம் 9) அல்லது

(vi) (i), (ii), (iii), (iv) அல்லது (v) இன் கீழ் நிரற்படுத்தப்படாத (SLQF மட்டம் 5 அல்லது அதற்கு மேல்) பட்டத்திற்குச் சமனான வேறு ஏதேனும் தகைமை ஆனால் கல்வித் துறையில் ஆகக்குறைந்தது ஐந்து வருட அனுபவத்துடன் ஹொரைசன் கம்பஸின் கல்விச் சபையினால் மற்றும் கல்விசார் மூதவையினால் விடயம் விடயமாக கவனத்திற்கொள்ளப்படலாமென்பதுடன் ஏற்றுக்கொள்ளவும்படலாம்.

2. ஹொரைசன் கொலிஜ் ஒப் பிஸ்னஸ் டெக்னொலொஜி (பிறைவேட்) லிமிட்டெட் ஆனது, குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் நடாத்தப்பட்ட ஐந்து (5) ஆண்டு மீள் மீளாய்வுக்கமைய, இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்டத்தை வழங்குவதற்கு ஏற்றங்கீகரிக்கப்படுகின்றது.

## அட்டவணை II

| நிரல் I<br>பட்டம் | நிரல் II<br>பட்டத்துக்கான சுருக்கீடு |
|---|---|
| சிறப்பு உயிரியல்முறைமை தொழில்நுட்ப இளமாணி (சிறப்பு) | பிபிஎஸ்ரி (சிறப்பு) |
| கல்வி முதுமாணி | எம்இடி |

கலாநிதி **ஏ. டி. சுசில் பிரேமஜயந்த,**
கல்வி அமைச்சர்.

கொழும்பு,
2023, செத்தெம்பர் 5.

EOG 09-0060/ 3

## *1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்*

*25அ என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 27(1)(ஆ) என்னும் பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவுடன் சேர்த்துவாசிக்கப்படும் 27(1) (ஆ) என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு கல்வி அமைச்சர் கலாநிதி ஏ. டி. சுசில் பிரேமஜயந்த ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதும் மற்றும் பட்டமளிக்கும் நிறுவகமொன்றாக ஏற்றங்கீகரிக்கப்பட்ட* PB *148 என்னும் பதிவிலக்கத்தைக் கொண்டுள்ளதுமான சனச கம்பஸ் லிமிட்டெட் தொடர்பில் மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழ் அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு,*

*சொல்லப்பட்ட சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்டதும், 2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 21 ஆந் திகதிய 1846/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான* II *ஆம் அட்டவணையை, அதன் நிரல்* I *இல் காணப்படும் "பிராந்திய விஞ்ஞான மற்றும் திட்டமிடலில் விசேட விஞ்ஞான இளமாணிப் பட்டம்" என்னும் பதிவையும், நிரல்* II *இல் உள்ள அதன் நேரொத்த பதிவையும் உடனடுத்து அதற்கான* I *ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைய, இதற்கான* II *ஆம் அட்டவணையின் முறையே நிரல்* I *இன் கீழும் மற்றும் நிரல்* II *இன்கீழும் குறித்துரைக்கப்பட்ட பதிவுகளைச் சேர்ப்பதன் மூலம் இக்கட்டளையினால் திருத்துகின்றேன்:*

### *அட்டவணை* I

*நிபந்தனைகள்*

*(1) சனச கம்பஸ் லிமிட்டெட் ஆனது, ஆகக்குறைந்தது 90 திறமைச் சித்திகளை* (SLQF) *(மட்டம் 5) உடன் வங்கித்தொழில் மற்றும் நிதி முகாமைத்துவ இளமாணி தொடர்பில் இதற்கான அட்டவணை* II *இல் குறித்துரைக்கப்பட்ட பட்ட நிகழ்ச்சித் திட்டத்திற்காக மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும்போது ; குறைந்தபட்சம் பின்வரும் ஆகக்குறைந்த நுழைவுத்தகைமைகளுக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்.*

*(அ) இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க. பொ. த. (உயர் தரப்) பரீட்சையில் ஏதேனும் பாடத்துறையில் ஒரே தடவையில் ஆகக்குறைந்தது மூன்று (3) சாதாரண சித்திகள்* (S) *அல்லது அதற்குச் சமமான தகைமை ; அத்துடன்*

*(ஆ) இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க. பொ. த. (சாதாரண தரப்) பரீட்சையில் கணிதத்தில் விசேட சித்தி* (C) *ஒன்று.*

*(2) சனச கம்பஸ் லிமிட்டெட் ஆனது, வார நாட்களின் போது இயங்கலை மூலமும் வார இறுதி நாட்களின் போது நேரடியாகவும் இதற்கான அட்டவணை* II *இல் குறித்துரைக்கப்பட்ட இப்பட்ட நிகழ்ச்சித் திட்டத்தினை நடாத்துதல் வேண்டும்.*

*(3) சனச கம்பஸ் லிமிட்டெட் ஆனது, குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் நடாத்தப்பட்ட ஐந்து (5) ஆண்டு மீள் மீளாய்வுக்கமைய இதற்கான அட்டவணை* II *இல் குறித்துரைக்கப்பட்ட பட்டத்தினை வழங்குவதற்கு ஏற்றங்கீகரிக்கப்படுகின்றது.*

### *அட்டவணை* II

| *நிரல் I*<br>*பட்டம்* | *நிரல் II*<br>*பட்டங்களுக்கான சுருக்க குறியீடுகள்* |
|---|---|
| வங்கித்தொழில் மற்றும் நிதி முகாமைத்துவ இளமாணி | பிஎம் (வங்கித் தொழில் மற்றும் நிதி |

*கலாநிதி* **ஏ. டி. சுசில் பிரேமஜயந்த,**
*கல்வி அமைச்சர்.*

கொழும்பு,
*2023, செத்தெம்பர் 05.*

EOG *09-0060/ 4*

## *1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்*

*25அ என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 27(1)(ஆ) என்னும் பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 27(1)(ஆ) என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு கல்வி அமைச்சர் கலாநிதி ஏ. டி. சுசில் பிரேமஜயந்த ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதும், பட்டம் வழங்கும் நிறுவனமொன்றாக ஏற்றங்கீகரிக்கப்பட்ட PV 4833 என்னும் பதிவிலக்கத்தைக் கொண்டுள்ளதுமான நஷனல் ஸ்கூல் ஒப் பிஸ்னஸ் மனேஜ்மன்ட் லிமிடெட் (NSBM) தொடர்பில் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழான அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு, சொல்லப்பட்ட சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்டதும், 2023 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 20 ஆந் திகதிய 2320/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான II ஆம் அட்டவணையை, அதற்கான நிரல் I இல் காணப்படும் "சட்டமாணி சிறப்பு" என்னும் பதிவையும், நிரல் II இல் உள்ள அதன் நேரொத்த பதிவையும் உடனடுத்து அதற்கான I ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைய, இதற்கான II ஆம் அட்டவணையின் முறையே நிரல் I இன் கீழும் மற்றும் நிரல் II இன்கீழும் குறித்துரைக்கப்பட்ட பதிவுகளைச் சேர்ப்பதன் மூலம் இக்கட்டளையினால் திருத்துகின்றேன்.*

### அட்டவணை I

### நிபந்தனைகள்

1. நஷனல் ஸ்கூல் ஒப் பிஸ்னஸ் மனேஜ்மன்ட் லிமிட்டெட் ஆனது-

(i) குறைந்தபட்சம் 120 திறமைச் சித்திகளுடன் (SLQF) (மட்டம் 6) வாகடவியல் விஞ்ஞானத்தில் சிறப்பு விஞ்ஞான இளமாணி தொடர்பில் இதற்கான II ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட பட்ட நிகழ்ச்சித் திட்டத்திற்காக மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும்போது, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க. பொ. த. (உயர்தரப்) பரீட்சையில் உயிரியல், இரசாயனவியல் மற்றும் பௌதிகவியல் அல்லது விவசாயம் என்பவற்றில் மூன்று (03) சாதாரண (S) சித்திகள் அல்லது அதற்கு சமமான குறைந்தபட்ச நுழைவுத் தகைமைக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்.

(ii) குறைந்தபட்சம் 120 திறமைச் சித்திகளுடன் (SLQF) (மட்டம் 6) சட்டம் மற்றும் E - வர்த்தகத்தில் சிறப்பு முகாமைத்துவ இளமாணி மற்றும் சர்வதேச வியாபாரத்தில் சிறப்பு முகாமைத்துவ இளமாணி தொடர்பில் இதற்கான II ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட பட்ட நிகழ்ச்சித் திட்டத்திற்காக மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும்போது, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க. பொ. த. (உயர்தரப்) பரீட்சையில் ஒரே தடவையில் ஏதேனும் பாடத்துறையில் மூன்று (3) சாதாரண சித்திகள் (S) அல்லது அதற்கு சமமான நுழைவுத் தகைமைக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்.

2. நஷனல் ஸ்கூல் ஒப் பிஸ்னஸ் மனேஜ்மன்ட் லிமிட்டெட் ஆனது, குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் நடாத்தப்பட்ட ஐந்து (5) ஆண்டு மீள் மீளாய்வுக்கமைய, இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்டத்தினை வழங்குவதற்கு ஏற்றங்கீகரிக்கப்படுகின்றது.

### அட்டவணை II

| *நிரல் I*<br>*பட்டம்* | *நிரல் II*<br>*பட்டத்துக்கான சுருக்க குறியீடுகள்* |
|---|---|
| வாகடவியல் விஞ்ஞானத்தில் சிறப்பு விஞ்ஞான இளமாணி | பிஎஸ்சி சிறப்பு (வாகடவியல் விஞ்ஞானம்) |
| சட்டம் மற்றும் E - வர்த்தகத்தின் சிறப்பு முகாமைத்துவ இளமாணி | பிஎம் சிறப்பு (சட்டம் மற்றும் E - வர்த்தகம்) |
| சட்டம் மற்றும் சர்வதேச வியாபாரத்தில் சிறப்பு முகாமைத்துவ இளமாணி | பிஎம் சிறப்பு (சட்டம் மற்றும் சர்வதேச வியாபாரம்) |

கலாநிதி **ஏ. டி. சுசில் பிரேமஜயந்த,**
கல்வி அமைச்சர்.

கொழும்பு,
2023, செத்தெம்பர் 05.

EOG 09-0060/5

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.